## காஞ்சிபுரம் மாவட்டம்

## முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

## 12 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | இ | சிறிய அளவிலான தனியாள் வணிகம் |
| 2 | அ | தொடக்க முதல் கண்டறிய |
| 3 | அ | மொத்தக் கடனாளிகள் கணக்கு |
| 4 | ஈ | ₹. 20,000 |
| 5 | அ | பெயரளவுக் கணக்கு |
| 6 | இ | உபரி அல்லது பற்றாக்குறை |
| 7 | அ | ஒரு சொத்து |
| 8 | ஈ | ஆண்டுக்கு 6% |
| 9 | இ | கூட்டாளியின் ஊதியம் |
| 10 | ஆ | 6 மாதங்கள் |

### பகுதி — II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

11. கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.

- இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 பிரிவு 4 - ன்படி கூட்டாண்மை என்பது, " எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும்.

12. நிலைஅறிக்கை என்றால் என்ன?

- நிலை அறிக்கை என்பது, ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.

13. உயில்கொடை என்றால் என்ன?

- ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு, உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும்.

14. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் ( மார்ச் 31, 2019 ) | 8,50,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 70,000 |
| | |
| | 9,20,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 1,20,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 8,00,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( ஏப்ரல் 1, 2018 ) | 5,00,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 3,00,000 |

( அல்லது )

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இறுதி முதல் | 8,50,000 | தொடக்க முதல் | 5,00,000 |
| எடுப்புகள் | 70,000 | கூடுதல் முதல் | 1,20,000 |
| நட்டம் | ---- | இலாபம் | 3,00,000 |
| | 9,20,000 | | 9,20,000 |

∴ இலாபம் ₹. 3,00,000

15. சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

ப வ

| செலவுகள் | தொகை ₹. | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| எழுதுபொருள்கள் பயன்படுத்தியது : | | | | |
| தொடக்க இருப்பு | 2,600 | | | |
| கூட்டுக : கொள்முதல் | 6,500 | | | |
| | 9,100 | | | |
| கழிக்க : இறுதி இருப்பு | 2,200 | 6,900 | | |

16.

எடுப்புகள் மீது வட்டி = எடுப்புத் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

$= ₹.\ 20,000 \times \frac{10}{100} \times \frac{6}{12}$

எடுப்புகள் மீது வட்டி = ₹. 1,000

குறிப்பு: எடுப்புகளுக்குரிய நாள் கொடுக்கப்படாத போது எடுப்புகள் மீதான வட்டி, சராசரி காலமாகிய 6 மாதங்களுக்கு கணக்கிடல் வேண்டும்.





B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

17. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

1) ஆயுள் உறுப்பினர் கட்டணம்
2) உயில்கொடை
3) குறிப்பிட்ட நன்கொடை
4) சிறப்பு நிதி
5) பரிசு நிதி
6) நிலைச் சொத்துகள் விற்றது
7) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி

## பகுதி - III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?

1) பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:
   - ❖ இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும்.
   - ❖ சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவது இல்லை.
2) இருப்பாய்வு தயாரிப்பது கடினம்:
   - ❖ கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால், கணக்கேடுகள் முழுமையற்றதாக உள்ளன.
   - ❖ எனவே, கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்து கொள்ள, இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.
3) வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனைகண்டறிவது கடினம்:
   - ❖ இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப் படுகிறது. எனவே, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாததால் உண்மையான இலாபத்தை கண்டறிவது கடினம்.
4) வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிதல் கடினம்:
   - ❖ பொதுவாக, முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீடுகள் மட்டுமே பெறப்படுகிறது.
   - ❖ எனவே, ஒரு குறிப்பிட்ட நாளின் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலைத் தன்மை அல்லது நிதி நிலையை கண்டறிவது கடினமாக உள்ளது.
5) தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது:
   - ❖ பதிவேடுகளின் ஒரு பகுதி மட்டுமே பெறப்படுவதால், கணக்கேடுகள் பராமரித்தலின் போது, அகச் சோதனை செய்து, தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிய முடியாமல் இருக்கலாம்.
6) அரசு மற்றும் பிற அதிகாரிகளுக்கு ஏற்புடையதல்ல:
   - ❖ பராமரிக்கப்படும் கணக்குகள் முழுமையற்றதாக இருப்பதால், இம்முறையில் சட்டத்தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமல் இருக்கலாம்.
   - ❖ எனவே, அரசு, வரி அதிகாரிகள் மற்றும் பிறசட்ட அதிகாரிகள் முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து தயாரிக்கப்படும் கணக்குகளை ஏற்றுக் கொள்வதில்லை.



19. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக்கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?

- ❖ இலாப நோக்கற்ற அமைப்புகளின் இறுதி கணக்குகளில் சந்தாவிற்கான செயல்முறைகள்

அ) வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள்

- ❖ நடப்பு ஆண்டு, முந்தைய ஆண்டு, அடுத்த ஆண்டிற்கான சந்தா பெற்றது தனித்தனியாக கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பு ஆண்டிற்குரிய சந்தா, கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களை செய்த பின்பு, வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காண்பிக்கப் பெறும்.
  - i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.
  - ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற, நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.
- ❖ நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா, பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்த பின்னர், வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்பெறும்.
  - i) முந்தைய ஆண்டுக்குரிய பெறவேண்டிய சந்தா, நடப்பு ஆண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும். நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.
  - ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில், நடப்பாண்டிற்கு உரியது கூட்டப்பட வேண்டும். நடப்பாண்டில், முன்கூட்டிப் பெற்ற சந்தாவில், எதிர்வரும் ஆண்டிற்குரியது கழிக்கப்பட வேண்டும்.

ஆ) இருப்புநிலைக்குறிப்பில் செயல்முறைகள்

- i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா மற்றும் இன்னும் பெறவேண்டிய முந்தைய ஆண்டிற்குரிய சந்தா போன்றவை, அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.
- ii) நடப்பு ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா, அவ்வாண்டின் இருப்பு நிலைக்குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

20. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

1. நிறுவனத்தின் பெயர், தன்மை மற்றும் தொழில் செய்யும் இடம்
2. தொழில் தொடங்கிய நாள் மற்றும் தொழிலின் கால அளவு
3. அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4. ஒவ்வொரு கூட்டாளியும் அளித்த முதல்
5. இலாபப்பகிர்வு விகிதம்
6. ஒவ்வொரு கூட்டாளிக்கும் அனுமதிக்கப்பட்ட எடுப்புத் தொகை
7. முதல் மீது அனுமதிக்கப்படும் வட்டி வீதம்
8. கூட்டாளிகளின் எடுப்புகள் மீதான வட்டி வீதம்
9. கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன்மீதான வட்டி வீதம்
10. கூட்டாளிக்கு அனுமதிக்கப்படும் ஊதியம்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

21.

**2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான**

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2019) | 50,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 5,000 |
| | 55,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 7,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 48,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஏபரல் 1 ) | 40,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 8,000 |

( அல்லது )

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இறுதி முதல் | 50,000 | தொடக்க முதல் | 40,000 |
| எடுப்புகள் | 5,000 | கூடுதல் முதல் | 7,000 |
| நட்டம் | ---- | இலாபம் | 8,000 |
| | 55,000 | | 55,000 |

∴எடுப்புகள் ₹. 5,000

22.

**2018 ஆம் ஆண்டுக்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| 2018ஆம் ஆண்டில் பெற்ற சந்தா<br>( இத் தொகை வினாத்தாளில் வழங்கப்படவில்லை ) | | 1,50,000 |
| கூட்டுக : 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017 - ல் பெற்றது | 3,000 | |
| 2018 ஆம் ஆண்டிற்கான பெற வேண்டிய சந்தா | 7,000 | 10,000 |
| | | 1,60,000 |
| கழிக்க : 2017 - ல் பெற வேண்டிய சந்தா | 10,000 | |
| 2018 - ல் முன்கூட்டிப் பெற்ற சந்தா | 5,000 | 15,000 |
| 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம் | | 1,45,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

23.

முதல் மீது வட்டி = முதல் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

மன்னன் முதல் மீது வட்டி = ₹. 1,50,000 x $\frac{6}{100}$ = ₹. 9,000

ரமேஷ் முதல் மீது வட்டி = ₹. 1,00,000 x $\frac{6}{100}$ = ₹. 6,000

குறிப்பு : முதல் மீது வட்டி கணக்கிடும்போது நடப்புக் கணக்கின் இருப்புகளை எடுத்துக்கொள்ளக் கூடாது

**குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2019 மார்ச் 31 | முதல்மீது வட்டி க/கு ப<br>மன்னன் நடப்பு க/கு<br>ரமேஷ் நடப்பு க/கு<br>( முதல் மீது வட்டி வழங்கியது ) | | 15,000 | <br>9,000<br>6,000 |
| „ | இலாப நட்ட பகிர்வு க/கு ப<br>முதல் மீதான வட்டி க/கு<br>( முதல் மீது வட்டி கணக்கை முடித்தது ) | | 15,000 | <br>15,000 |

ப **மொத்த கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 1,00,000 | ரொக்க க/கு ( பெற்றது ) | 2,30,000 |
| விற்பனை க/கு ( கடன் )<br>( இருப்பு கட்டும் தொகை) | 2,80,000 | அளித்த தள்ளுபடி க/கு | 5,000 |
| | | உள் திருப்ப க/கு | 25,000 |
| | | இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 1,20,000 |
| | 3,80,000 | | 3,80,000 |

∴ கடன் விற்பனை ₹. 2,80,000

24. ப **மொத்த கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 1,00,000 | ரொக்க க/கு ( பெற்றது ) | 2,30,000 |
| விற்பனை க/கு ( கடன் )<br>( இருப்பு கட்டும் தொகை) | 2,80,000 | அளித்த தள்ளுபடி க/கு | 5,000 |
| | | உள் திருப்ப க/கு | 25,000 |
| | | இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 1,20,000 |
| | 3,80,000 | | 3,80,000 |

∴ கடன் விற்பனை ₹. 2,80,000

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. அ) நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| நோக்கம் | இது, வியாபாரத்தின் முதலைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது | இது, வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது |
| கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது, நிலையறிக்கை தயாரிக்கப்படும். | இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் பராமரிக்கப்படும் போது, இருப்புநிலை குறிப்பு தயாரிக்கப்படும். |
| தயாரிப்பின் அடிபடை | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது |
| நம்பகத்தன்மை | இது, முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மை உடையது அல்ல | இது, இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால், நம்பகத்தன்மை உடையது. |
| விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது எளிது. |

( அல்லது )

ஆ) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| 1. கணக்குகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் அதாவது, முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு பராமரிக்கப்படுகின்றன. | ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஒரே ஒரு கணக்கு அதாவது, முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகின்றன. |
| 2. முதல் தொகையில் மாற்றம் | கூடுதல் முதல் கொண்டு வரும்போது அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுக்கும் போது தவிர, மற்ற நேரங்களில் முதல் தொகை வழக்கமாக மாறாமல், நிலையாக இருக்கும். | முதல் தொகை பருவந்தோறும் மாறிக்கொண்டே இருக்கும் |
| 3. இறுதி இருப்பு | முதல் கணக்கு எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும். ஆனால், நடப்புக் கணக்குகள் பற்று இருப்பையோ அல்லது வரவு இருப்பையோ காட்டும் | முதல் கணக்குகள் பொதுவாக வரவு இருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூட காட்டலாம். |
| 4. சரிக்கட்டுதல்கள் | கூட்டாளிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் பதியப்படும் | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் பதிவு செய்யப்படும் |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613



26. அ)

**கணேஷ் என்பவரின் ஏடுகளில் 2018 , மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை**

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 9,000 | ரொக்கம் | 5,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 | சரக்கிருப்பு | 18,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 88,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 7,000 |
| | | அறைகலன் | 3,000 |
| | | நிலம் மற்றும் கட்டடங்கள் | 30,000 |
| | | கடனாளிகள் | 16,000 |
| | | வங்கி ரொக்கம் | 24,000 |
| | 1,03,000 | | 1,03,000 |

**2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2018) | 88,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 15,000 |
| | 1,03,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 20,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 83,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2017, ஏபரல் 1 ) | 75,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 8,000 |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

ஆ)

**குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்**

ப                                        வ

| பெறுதல்கள் | தொகை ₹. | செலுத்தல்கள் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | சம்பளம் கொடுத்தது | 3,000 |
| கைரொக்கம் | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| ஆயுள் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டி செலவு | 10,500 |
| சந்தா பெற்றது | 15,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |
| வாடகை பெற்றது | 2,000 | இருப்பு கீ/இ கைரொக்கம் | 5,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 | | |
| தொடர் விளையாட்டுப் போட்டி வரவு | 14,000 | | |
| | 46,000 | | 46,000 |

27. அ)

**கூட்டாளிகளின் முதல் கணக்கு**

ப                                        வ

| நாள் | விவரம் | பத்மினி ₹ | பத்மா ₹ | நாள் | விவரம் | பத்மினி ₹ | பத்மா ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்புகள் | 70,000 | 40,000 | | இருப்பு கீ/கொ | 5,00,000 | 4,00,000 |
| | எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 | | இலாப நட்ட பகிர்வு க/கு | 52,000 | 40,000 |
| | இருப்பு கீ/இ | 5,55,000 | 4,44,000 | | முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| | | | | | ஊதியம் | 45,000 | -- |
| | | | | | கழிவு | -- | 21,000 |
| | | 6,27,000 | 4,85,000 | | | 6,27,000 | 4,85,000 |
| | | | | | இருப்பு கீ/கொ | 5,55,000 | 4,44,000 |

**( அல்லது )**

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.CBSEtips.in

ஆ)

ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு ( மாற்றுச் சீட்டுக்கு செலுத்தியது ) | 1,00,000 | இருப்பு கீ/கொ | 60,000 |
| இருப்பு கீ/இ | 80,000 | பற்பல கடனீந்தோர் க/கு ( மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது) ( *இருப்பு கட்டும் தொகை* ) | 1,20,000 |
| | 1,80,00 0 | | 1,80,000 |

ப **மொத்த கடனீந்தோர் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| ரொக்க க/கு (செலுத்தியது) | 3,70,000 | இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 75,000 |
| கொள்முதல் திருப்பம் க/கு | 15,000 | கொள்முதல் க/கு ( கடன்) ( இருப்பு கட்டும் தொகை) | 4,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ( மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது ) | 1,20,000 | | |
| இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 50,000 | | |
| | 5,55,000 | | 5,55,000 |

மொத்த கொள்முதல் = ரொக்க கொள்முதல் + கடன் கொள்முதல்

= ₹. 3,20,000 + ₹. 4,80,000

= ₹. 8,00,000

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com